கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்

அவ.எண். 231/2015

2020 ம் ஆண்டு 17.03.2020 பி.வா.சா. 5

சாட்சியின் சாட்சியம் திரு.பி.கருணாநிதி , பி.எ.பில்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சுகுமார் | தொழில் |
| க/த/பெ பத்மநாபன் | கிராமம் |
| வயது | தாலுகா |
| ஜாதி | மாவட்டம் |
| சமயம் | |

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

சத்தியமாக சொல்கிறேன். எனது தந்தையார் இந்த வழக்கில் 8 வது பிரதிவாதி என்றால் சரிதான். எனது தந்தையார் இறந்துவிட்டார். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது தந்தையார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தையார் உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்தின் ஒரு பகுதியை 1 ம் பிரதிவாதியிடமிருந்து வா.சா.ஆ 7 ன் மூலம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரய சொத்தை கடந்த 23.1.2004 ம் தேதி எனது தந்தையார் எனக்கு பதிவு செட்டில்மென்ட் மூலம் பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரிதான். செட்டில்மென்ட் மூலம் எனக்கு பாத்தியப்படுத்திய காலத்தில் அந்த சொத்தில் 10*20 என்ற அளவில் ஒரு சிமெண்ட் கூரை வைத்த வீடு மட்டும் இருந்தது அதை சுற்றி காலியிடம் இருந்தது. பின்னர் நான் அதில் வீடு கட்டினேன். வா.சா.ஆ 8 தான் எனது தந்தையார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் சரிதான். இந்த வழக்கின் முழுவிவரம் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும் முழுவதும் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்களை எனது வழ்க்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஓரளவிற்கு படிப்பேன். வா.சா.ஆ 7 மற்றும் வா.சா.ஆ 8 ல் உள்ள விவரங்களை நான் ஓரளவு படித்தும் எனது மனைவி மூலம் படித்தும் தெரிந்துகொண்டேன். எனது தந்தையார் 1 ம் பிரதிவாதியிடம் இருந்துதான் எனக்கு கொடுத்த சொத்தை கிரயம் பெற்றார். எதனடிப்படையில் 1 ம் பிரதிவாதிக்கு அந்த சொத்து பாத்தியப்பட்டது என தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் வா.சா.ஆ 7 ல் 1 ம் பிரதிவாதிக்கு பிதுரார்ஜித வகையிலும் பின்னர் பாகக்கறார் படியும் அவருக்கு சொத்து பிரிந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி பாகக்கறாரின் தேதி மற்றும் பதிவு குறித்த விவரங்கள் வா.சா.ஆ 7 ல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வீடு கட்ட தாராபுரம் நகராட்சியில் இருந்து முறையான வரைபட அனுமதி பெற்றேன். வங்கிக்கடன் ஏதும் பெறவில்லை. எனது சொந்த பணத்தை கொண்டு வீடு கட்டினேன். நான் வீடு கட்டியுள்ள இடம் டிடிபி அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவு என்றால் சரிதான். நான் நகராட்சியில் இருந்து பெற்ற வீடு கட்டுவதற்கான அங்கீகாரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு தேவையான அபிவிருத்தி கட்டணத்தை நகராட்சிக்கு செலுத்தியுள்ளேன். அதற்கான ரசீதை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் 1 ம் பிரதிவாதியிடமிருந்து பாகப்பிரிவினை ஆகாத சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தையார் 1 ம் பிரதிவாதியிடம் கிரயம் பெற்றுள்ள சொத்து மேற்படி கிரயத்திற்கு முன்பு 1 ம் பிரதிவாதி மற்றும் அவருடன்

பிறந்தவர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் உடன்பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள் இருந்தது தெரியும் அவர்களது பெயர் தெரியாது. இந்த வழக்கின் வாதி 1ம் பிரதிவாதியின் சகோதரியான சுசீலா என்பவரது மகன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கலாவதி எனது வீட்டிற்கு எதிரில்தான் வசிக்கிறார் என்றால் சரிதான். மேற்படி கலாவதியும் 1ம் பிரதிவாதியின் த்ங்கை என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மேற்சொன்ன சுசீலாவின் மகள்கள் என்றால் சரிதான். மேற்படி சுசீலா அவரது கணவர் இந்த வாதி மற்றும் 4, 5 பிரதிவாதிகள் வேலை நிமித்தமாக வெளியூரில் வசித்தார்கள் என்றால் சரிதான். வாதி டெல்லியில் இருந்தார் என்றால் நான் அதை கேள்விப்பட்டுள்ளேன். எனது தந்தையார் கிரயம் பெற்ற வா.சா.ஆ 7 ஆனது செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ 8 ஆன செட்டில்மென்ட் ஆவணமும் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேற்சொன்ன வா.சா.ஆ 7 மற்றும் 8 தாவா சொத்தின் மீதான வாதி மற்றும் 4,5 பிரதிவாதிகளின் உரிமைகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 மூலம் நான் பெற்ற சொத்து எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என நான் விளம்புகை பரிகாரம் ஏதும் இதுவரை கேட்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு வாதியால் சரியான பரிகாரம் கேட்கப்பட்டு சரியான முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் வழக்கில் கேட்டுள்ள பரிகாரத்தை கேட்கும் உரிமை வாதிக்கு உள்ளதென்றால் சரியல்ல. நான் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து எனது வீட்டை கட்டியுள்ளேன் என்றால் அது உண்மையல்ல. வழக்கு காலவரையறை யால் பாதிக்கப்பட்டுள்ளது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் பரிகாரத்தை வாதிக்கு வழங்குவதில் ஆட்சேபணை எனக்கு உரிமை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை 3 முதல் 5 வரை பிரதிவாதிகள் தரப்பில்

மேற்கண்ட வாதியின் குறுக்குவிசாரணை 3 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.